14.11.2025 O.S 218/2020 வா.சா1 சங்கரநாராயணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் அரிசி வியாபாரம் செய்கிறேன். நான் 15 வருடங்களாக அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். நான் என் பெயரிலும் என் குடும்பத்தினர் பெயரிலும் சொத்துக்கள் எதுவும் வாங்கியுள்ளேனா என்றால் என் பெயரில் 2 சொத்துக்கள் வாங்கியுள்ளேன். என் குடும்பத்தினர்கள் பெயரில் வாங்கவில்லை. சொத்துக்களை வாங்கும் போது முன் ஆவணங்களை பார்க்கவேண்டும் என்பது குறித்தும், வில்லங்கம் குறித்தும் பார்க்க வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் முன் ஆவணங்களை பார்த்தேனா என்றால் நகல்களை காண்பித்தார். முன் ஆவணங்கள்படி சொத்து எப்படி இருந்தது என்றால் காலியிடமாக இருந்தது. தாயாரிடம் இருந்து சொத்தை பிரதிவாதி வாங்கி இருந்தார். அந்த சொத்தில் எப்போது பிரதிவாதி வீடு கட்டினார் என்றால் தெரியாது. அந்த விபரத்தை நான் பிரதிவாதியிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. வழக்கு சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வழக்கு சொத்தின் வீட்டு எண் பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கதவு எண், மின்சார கட்டண எண் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்பட்ட வா.சா.ஆ 2 கிரையஒப்பந்தத்தில் கதவு எண், மின்சார கட்டண எண் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. பிரதிவாதி பெயரிலோ, அவரது அம்மா பெயரிலோ வழக்கு சொத்திற்கு பட்டா ஏற்படுத்தப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி கட்டியுள்ள வீடு புது வீடு என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் போடும் போது

அந்த வீட்டின் மதிப்பு எவ்வளவு என அரசு வழிகாட்டி மதிப்பீட்டை பார்த்தேனா என்றால் இல்லை. அரசு வழிகாட்டி மதீப்பிடு எதுவும் பார்க்காமல் ரூ.1,60,000/-ம் என பேசி முடிக்கப்பட்டதா என்றால் அசல் ஆவணம் வேறு ஒருவரிடம் இருந்ததால் அதை வாங்கி கிரையம் முடித்து தருவதாக என்னிடம் சொன்னார். கிரைய ஒப்பந்தம் செய்யும் போது சொத்தில் வில்லங்கம் இருப்பது எனக்கு தெரியும் என்றால் நான் பணம் செலுத்த தயாராக இருந்தேன். வேறு ஒருவரிடம் அசல் இருந்ததால் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. நான் கிரைய ஒப்பந்தம் போடும் போது அசல் ஆவணம் வேறு ஒரு நபரிடம் உள்ளது என பிரதிவாதி என்னிடம் சொன்னதாக பிராதிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் சொல்ல வில்லை என்றால் சரிதான். ரூ.1,60,000/-ம் பேசி ரூ.1,50,000/-ம் கொடுத்தாக ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றும், சொத்தின் அனுபவத்தை நான் வாங்கவில்லை என்றால் சரிதான். மீதி ரூ.10 ஆயிரத்தை நான் செலுத்தி கிரையத்தை முடிக்க தயாராக இருப்பதாக கூறி விருப்பத்துடன் இருப்பதாக ஒப்பந்த காலத்திற்குள் எந்த ஒரு அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நேரடியாக பலமுறை கேட்டேன். 2018 ம் ஆண்டிலேயே ஒப்பந்த காலம் முடிந்து 1-1/2 வருடம் கழித்து அறிவிப்பு அனுப்பியதற்கு காரணம் உள்ளதாக வழக்கிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இதுநாள் வரை பாக்கி தொகை ரூ.10 ஆயிரத்தை செலுத்தவில்லை என்றால் சரிதான். அந்த ரூ.10 ஆயிரம் செலுத்தாத காரணத்தை வழக்கிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் கூறியுள்ளவாறு சொத்திற்கு

எவ்வளவு பரப்பு இருந்தது என அளந்து பார்த்தேனா என்றால் நம்பிக்கையின் பேரில் அளந்து பார்க்கவில்லை. கிரைய ஒப்பந்தத்தின் பேரில் கிரைய முடிப்பதற்காக கிரைய ஒப்பந்தத்தின் மாதிரியை பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எத்தனை வழக்குகள் தென்காசி மற்றும் செங்கோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது பினாமிகளின் பெயரில் கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற எனக்கு விருப்பமில்லை என முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கே.ஆர்.காலனியில் உள்ள வேலாயுத குமாரர் பாபு என்பவரை எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் நீதிமன்ற பற்றுகை இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாபு என்பவர் மூலம் நான் கிரைய ஒப்பந்த காலத்தில் மோசடியாக புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு சொத்து பற்றுகை செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்பதால் முதல்விசாரணை வாக்குமூலத்தில் பற்றுகை விபரம் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மதிப்பு ஒப்பந்த காலத்தில் ரூ.5 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல. என் மைத்துனர் சுரேஷ்கண்ணன் மற்றும் எனக்கு வேண்டி இரு நபர்களை வைத்து அசல் வழக்கு எண். 26/2020 வழக்கை தயார் செய்து பண மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதில் சுரேஷ்கண்ணன் ஒரு சாட்சியம் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு ஒப்பந்தம் கடனுக்காக ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் என்றால்

சரியல்ல. அதனால் தான் வழக்கு சொத்தின் மதிப்பு, பரப்பு மற்றும் பட்டா சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் மீதி ரூ.10 ஆயிரத்தை செலுத்தாமலும் இருந்து வருகிறேன் என்றும், கிரையத்தை வேண்டாம் என சொல்லுகிறேன் எனாறல் சரியல்ல. பிரதிவாதி பெற்ற ரூ.1,50,000/-தில் ரூ.50 ஆயிரம் செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மீதி தொகையை வாங்க மறுத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.